1994 மே 2]

470—

செங்கம், புதுப்பாளையம் கவுத்தி மலையில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவுதல்

* ***23329***—*டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், கவுத்தி மலையில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியத்தில் கவுத்திமலை இருக்கிறது. கவுத்தி மலையில் இரும்புத் தாது இருப்பதாகக் கண்டறிந்து 1978-79—ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் அங்கே ஆய்வு செய்வதற்காக, கிழக்கு மேற்காக அந்த மலையைச் சுற்றி பாதை அமைத்து உள்ளார்கள். பாளிப்பட்டு கிராமத்திலிருந்தும் திருவண்ணா மலையிலிருந்தும் பாதை அமைத்து இருக்கிறார்கள். ஆனால் அந்த ஆய்வு கிட்டத்தட்ட ஒரு வருடம் நடந்தது. கடந்த 15 ஆண்டுகளாக எந்த ஆய்வும் நடைபெறவில்லை. அந்த ஆய்வினுடைய அறிக்கையை அரசு பெற்றிருப்பின், அதன் விவரம் என்ன என்பதைக் கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பது. அதற்கு, 'தற்போது இல்லை' என்று நான் சொல்லி இருக்கிறேன். 1967-75—ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாட்டு உதவியுடன், தமிழ்நாட்டில் வட பகுதிகளில் கனிம வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. அப்போது, திருவண்ணாமலைக்கு 8 கிலோ மீட்டர் வடமேற்கில் கவுத்தி மலை, வேடியப்ப மலை ஆகிய இடங்களில் மேக்னசைட், பாக்சைட் வகை இரும்புத் தாது இருப்பதாக வான்வெளி மின்காந்த அலைகள் மூலம் கண்டறியப்பட்டது. அப்போது, கீழ்க்கண்ட பகுதிகளில் சுமார் 62 மில்லியன் டன் இரும்புத் தாது கிடைக்கும் என மதிப்பிடப்பட்டது. இந்தத் தாதிலுள்ள இரும்பின் அளவு 35.7 சதமாக இருக்கிறது. திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள இரும்புத் தாது மூலம் கிடைக்கக் கூடிய இரும்பின் சதம் 35 முதல் 40 சதம் மட்டுமே இருக்கிற

[1994 மே 2

முற்பகல் 11-15

காரணத்தால் ஒரு தேனிரும்புத் தொழிற்சாலை அல்லது ஸ்பான்ஜி இரும்பு அல்லது எஃகு இரும்பு ஆகியவைகளைத் தயாரிக்க வேண்டுமென்று சொன்னால், 63 சதத்திற்கு மேல் அதில் இரும்பு இருக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2-3-1994–ஆம் ஆண்டு திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில், அங்கே நடைபெற்ற ஒரு விழாவில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், கிடைக்கக் கூடிய இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி இப்பொழுது அங்கே இரும்புத் தாதுவினுடைய அளவு - அதாவது - இரும்புத் தாதுவிலே கிடைக்கிற இரும்பினுடைய அளவு குறைவாக இருந்தாலும், சீனா நாடு தரம் குறைந்த இரும்புத் தாதுவை நல்ல தரம் கொண்ட இரும்புத் தாதுவாக மாற்றும் முறையை அறிந்துள்ளது. எனவே, 35 முதல் 40 சதம் இரும்பு கொண்ட திருவண்ணாமலை இரும்புத் தாதுவை 60 சதம் இரும்பு உள்ளதாக மாற்றி பின்னர் பில்லட்டுகளைத் தயாரித்து அதனை இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி ஆலைகளில் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தஸ்தூர் அன்ட் கோ என்ற கம்பெனியைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் ஆறு மாத காலத்தில் அறிக்கை தயாரித்து அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை கிடைத்தவுடன் மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய ஆணைக்கு இணங்க அங்கே ஒரு இரும்பு ஆலை, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒரு ஆறு மாத காலம் ஆகும் என்கிற காரணத்தாலே, அதற்கு முன்பாக திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் மீது தனி அக்கறை செலுத்தியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில், 1350 ஏக்கரை சிப்காட் தொழில் வளாகத்தின் மூலம் எடுத்து அங்கே ஒரு சிப்காட் வளாகம் அமைக்க வேண்டுமென்று தொழில் துறை மானியக்கோரிக்கையில் நான் அறிவித்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு, “செய்யாறு ஜெ.ஜெ. சிப்காட் காம்ப்ளக்ஸ்” எனப் பெயரும் சூட்டியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் டாக்டர் வீரபாண்டியன் உள்பட எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இதுவரைக்கும் குறைந்தது ஒரு நன்றிகூடச் சொல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த சிப்காட் வளாகத்தைப் பயன்படுத்தி, நம்முடைய மக்களின் பிரதிநிதிகள் தொழில்

1994 மே 2]

முனைவோர்களை அழைத்து அங்கே போய்த் தொழில் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஆறு மாத காலத்தில் இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி அங்கே ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு உண்டான துரித நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்த அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்தவுடன் அதைத் தொடர்ந்து சட்டமன்றம் நடக்கிறபொழுது அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் நன்றி தெரிவித்து விட்டார்கள். அறிவித்ததற்குப் பிறகு அன்று அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் இருந்திருக்கும். ஏற்கனவே இந்த அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்தவுடன் பல உறுப்பினர்கள் இந்தப் பேரவையிலேயே நன்றி தெரிவித்திருக்கிறார்கள். டாக்டர் பெ. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2.3.1993 அன்று திருவண்ணாமலை வந்து மக்கள் நலப் பணிகளை மட்டும்தான் துவங்குவார்கள் என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் நாங்கள் மேடையில் அமர்ந்திருக்கும்பொழுது இரும்புத் தொழிற்சாலையை திருவண்ணாமலைக்கு தருகிறேன்; கொடுக்க முடிவாகிவிட்டது என்று சொன்ன பிறகு அந்த மேடையிலேயே துள்ளிக் குதித்தோம். அதுமட்டுமல்ல, நம்முடைய இதய தெய்வம் அவர்கள் இங்கே தெரிவிக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே நன்றி தெரிவித்துவிட்டோம். மீண்டும் மீண்டும் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக நன்றி உள்ளவர்கள். (குறுக்கீடு) இதில், குறிப்பாக திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்று சொல்ல வருகிறேன்; எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் நன்றியுள்ளவர்கள்தான். புதுப்பாளையம் ஒன்றியம் காஞ்சியில் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. எனவே அமைச்சரவர்கள் காஞ்சியில் இரும்புத் தொழிற்சாலையை அமைக்க ஆவன செய்வார்களா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு தொழில் பேட்டை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு ரோடு வசதி வேண்டும், நல்ல தண்ணீர் வசதி வேண்டும். அப்பொழுதுதான் அங்கே தொழில் முனைவோர்கள் வந்து

தொழில் ஆரம்பிப்பார்கள். இல்லையென்று சொன்னால், சில அரசியல் காரணங்களுக்காக இடத்தை நாம் தேர்வு செய்கிறபொழுது அங்கே தொழில் முனைவோர் நிச்சயமாக வ்ருவதற்கு வாய்ப்பு இல்லை. அப்பொழுது அந்தத் தொழிற்பேட்டையெல்லாம் தொழில் ஆரம்பிக்க முடியாமல் காலியாக இருக்கும். ஆகவே, அந்த நிலைமையை உருவாக்க வேண்டாம் என்பதற்காகத்தான் நம்முடைய சிப்காட்டினுடைய அந்த நிறுவனம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாறு தாலுக்காவில் நல்ல ரோடு வசதி, தண்ணீர் வசதி உள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்து *1350* ஏக்கரை இன்றைக்குத் தேர்வு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

465—

ஆண்டிமடம், நெட்டலக்குறிச்சி ஏரியைச் செப்பனிடுதல்

**** 14659*—திரு. ஆர். தங்கராஜ்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, நெட்டலக்குறிச்சியில் பொதுப்பணித்துறை ஏரியை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, உள்கரை கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

479—

கொடுமுடி ஒன்றியத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி வழங்குதலும், இல்லங்கள் கட்டுதலும்

**** 20933*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வடக்கு புதுப்பாளையம் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக சலவைப் பெட்டி அளிக்கவும், இல்லங்கள் கட்டித்தரவும் அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS